OS 106/2023

வா.சா.1 சொக்கலிங்கம் த/பெ விஸ்வ சபாபதி

நாள் 12.06.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்கு சொத்தை நான் வாங்கிய அண்ண உடையார் மற்ற இருவர் பெயர் நியாபகம் இல்லை. அவர்களுக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை பத்திரத்தின் அடிப்படையில் பட்டா அடிப்படையில் வாங்கினேனா என்றால் பட்டா அடிப்படையில் வாங்கினேன். பத்திரத்தின் அடிப்படையில் வாங்கவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்றால் 21ம் வருடம் வாங்கினேன். சர்வே எண்.61/ 2AK என்ற சர்வே எண்ணை எந்த பத்திரத்தின் அடிப்படையில் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் ஜெகதீசன் பத்திரத்தின் அடிப்படையில் போட்டு இருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ1 ல் வடக்கு பக்கம் ராஜம்மாள் நிலம், தெற்கு பக்கம் குப்பம்மாள் நிலம், கிழக்கு பக்கம் கன்னியப்ப உடையார் வகையறா நிலம், மேற்கு பக்கம் சேத்பட் ரோடு என்று ஜக்குபந்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ3 ஆன பிரதிவாதி கிரைய பத்திரத்தில் ஜக்குபந்தி விவரங்கள் வா.த.சா.ஆ1 ஆவணத்துடன் பொருந்தவில்லை என்றால் சரிதான். 2020ல் வி.ஏ.ஓ விடம் புகார் கொடுத்த பிறகு வேறு நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆர்.டி.ஓ விடம் புகார் கொடுத்தேன். அந்த ஆர்.டி.ஓ புகாரை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி மீது ராதா பாய் மீதும் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நான் கொடுத்த புகார் விவரம் குறித்து இந்த வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை.

2. 2020 ம் ஆண்டுக்கு முன்பே ராதா பாய் கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். கடந்த 15.12.2014ம் தேதி ராதா பாய் என்பவர் சுப்பிரமணி, விஜயலட்சுமி, பச்சையம்மாள், ஜெயந்தி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 5 நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கிறேனா என்றால் இல்லை. கன்னியம்மாளின் கணவர் சுப்பிரமணிக்கு நான் 37 வருடங்களுக்கு முன்பு நான் பதிவு செய்யப்படாத கூர் சீட்டின் மூலம் கிரையம் கொடுத்துவிட்டேன் என்பதால் தான் தாவா சொத்தில் நான் எந்த உரிமையும் 37 வருடங்களாக கோரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு உரிமை இல்லை என்பதால் தான் 15.12.2014 ல் ராதா பாய் கிரையம் பெற்ற விவரம் தெரிந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் கிரையப்பத்திரத்தின் படி 2.5 சென்ட் உள்ளது என்றாலும் வழக்கில் அதிகப்படியாக 5 சென்ட்டிற்கு வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தும் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தும் வேறு வேறு சொத்துகள் என்றால் சரியல்ல. நான் அனுபவம் செய்து வந்ததற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை அது காலி இடமாக இருந்தது. தற்போது வரை பிரதிவாதி இரும்பு வேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் வழக்கு போட்ட பிறகு போட்டார்.

3. வழக்கு சொத்தில் பிரதிவாதியின் வீடு இருந்ததா என்பதை அக்கம் பக்கம் இருந்தவர்களை விசாரணை செய்தால் தெரிய வரும் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும் எனக்கும் சம்மந்தம்

இல்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.  பிரதிவாதி தான் இது நாள் வரையிலும் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.